**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No.163 of 2019 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| | | Prosecution | : PW- 2 |
| Deposition of witness for | : | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Perumal |
| Father's Name | : Kamalesan |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of June 2022.**

முதல் விசாரணை:

நான் மேல்பள்ளிப்பட்டு கிராமத்தில் என் தாயார் அலமேலுவுடன் குடியிருந்து வருகிறேன். நான் தீயணைப்பு துறையில் வேட்டவலத்தில் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகவில்லை. அ.சா.1 என் சகோதரி. என்னுடன் உடன்பிறந்தவர்கள் 2 சகோதரிகள் மற்றும் 2 சகோதரர்கள். என் மற்றொரு அக்காவின் பெயர் வள்ளி. என் சகோதரர்கள் இருவரும் இறந்துவிட்டனர். என் தகப்பனார் கமலேசனும் 2007ம் ஆண்டு இறந்துவிட்டார். என் தகப்பனாரின் சொந்த ஊர் பெரியதள்ளப்பாடி கிரமமாகும். பெரியதள்ளப்பாடியில் என் மாமா மகனின் திருமணத்திற்கு 2019ம் ஆண்டு மாதம் ஞாபகமில்லை சென்றிருந்தோம். பெரியதள்ளப்பாடியில் என் தகப்பனாருக்கு அரசால் ஒதுக்கப்பட்ட வீடு உள்ளது. நாங்கள் என் தாயாருடன் தங்கிவிட்டதால் அந்த வீடு காலியாக இருந்தது. என் தகப்பனாரின் சகோதரர் மூக்கன் நாங்கள் வெளயூரில் தங்கிவிட்டதால் பெரியதள்ளப்பாடியிலுள்ள வீட்டை அவரது பேரன் பிரசாந்திற்கு குடுக்கச்சொல்லி பிரச்சனை இருந்து வந்தது. எதிரி பாரதிராஜா, எதிரி பிரசாந்திற்கு மாமா ஆக வேண்டும் (எதிரிகள் இன்று நிதிமன்றத்தில் ஆஜரில்லை). திருமண வீட்டிற்கு வெளியே நான் தனியாக இருந்தபோது இரவு சுமார் 8, 9 மணியளவில் இரண்டு நபர்கள் என்னை துரத்திக்கொண்டு ஓடி வந்தார்கள் அப்போது இருட்டாக இருந்தது. நானும் ஓடியபோது சிறிது தூரத்தில் நான் கீழே இடறி விழுந்துவிட்டேன். நான் விழுந்த பிறகு இரண்டு அல்லது மூன்று நபர்கள் கத்தியால் எனது வயிற்றுபகுதியிலும், வலது கண்ணிற்கு கீழும், இடுப்பு ஆகிய பகுதிகளில் பலமுறை குத்தினர் நான் சத்தம் போட்டப்பிறகு திருமண வீட்டிலிருந்தவர்கள் ஓடி வந்தார்கள். அதன் பிறகு சிறிது நேரஙத்தில் நான் மயங்கிவிட்டேன். நான் மயக்கம் தெளிந்தபோது சேலம் மணிப்பால் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். மணிப்பால் மருத்துவமனையில் சுமார் 20 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் மயக்கம் தெளிந்த பிறகு போலீஸ்சார் என்னை விசாரித்தனர். எதிரிகள் பிரசாந் மற்றும் பாரதிராஜா குத்தியிருப்பார்கள் என சந்தேகத்தின் பேரில் போலீஸ்சார் வழக்கு தாக்கல் செய்துவிட்டனர் ஆனால் அவர்கள் சம்பவத்தில் ஈடுப்பட்டார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடைப்பெற்ற அன்று நான் ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தேன். நான் சிகிச்சை முடித்து வீட்டிலிருந்தபோது போலீஸ்சார் என்னிடமிலுந்து ரத்த கரைப்படிந்த ஜீன்ஸ் பேண்ட் மற்றும் ரத்தக்கரை படிந்த நீல நிற டிரவுசர் மாடல் ஜட்டியை மகஜரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார். கருப்பு நிற ரத்தக்கரை படிந்த ஜீன்ஸ் பேண்ட் சா.பொ.**1**, ரத்தக்கரை படிந்த நீல நிற வைக்கிங் ஜட்டி சா.பொ.**2** என்னை குத்த பயன்படுத்திய கத்தியை என்னால் அடையாளம் சொல்ல இயலாது. சம்பவம் இருட்டில் நடந்ததால் அதுப்பற்றி எனக்கு ஞாபகமில்லை. போலீஸ் சார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.:

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**